DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 57/2024 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | குருமூர்த்தி |
| Father's /Husband Name | : | அம்மாசி |
| Village | : | குவளைக்கால் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Both Accused Present.

<u>முதல் விசாரணை:–</u>

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கும் ஆஜர் எதிரி குமாரசாமிக்கும் இடையே குழு தொடர்பான பிரச்சனை இருந்து வந்தது. அது சம்பந்தமாக எனது ஆத்தாவை ஆஜர் எதிரி குமாரசாமி அசிங்கமாக பேசி அடித்துவிட்டார். அது சம்மந்தமாக நன்னிலம் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டி 19.02.2020–ம் தேதி புகார் கொடுத்தோம். 21.02.2020–ம் தேதி மாலை 03.30 மணியளவில் எனது தாயார் ஆத்தாள் அம்மாளுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக நானும் எனது அண்ணன் செந்தில்குமாரும் எங்கள் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து எங்கள் மீதே போலிசில் புகார் பன்றீங்களா என்று சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் மன கஷ்டம் ஏற்படும் வகையில் குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என்று எங்களை பார்த்து திட்டினார்கள். எதிரி ரமேஷ் அரிவாளால் எனது இடது பக்க தலையில் வெட்டினார். வெட்டியதில் எனக்கு ரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. தடுத்த எனது அண்ணன் செந்தில்குமாரை இரும்பு கம்பியால் எதிரி குமாரசாமி தலையில் அடித்தார். அதில் எனது அண்ணனுக்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு நன்னிலம் அரசு மருத்துவமனையில் எட்டு தையல் போட்டார்கள். எதிரிகள் இருவம் அருவாளை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்சாவு எங்கள் கையில் தான் என்று அருவாளை காட்டி எங்களை பார்த்து மிரட்டினார்கள். எதிரிகள் எங்களை மிரட்டியதால் எங்களுக்கு பயமாகவும், அச்சுறுத்தலாகவும் உள்ளது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். நாங்கள் சிகிச்சையில் இருந்த போது நன்னிலம் போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் தொடர்ந்து ஐந்து நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. போலிசார் உடனடியாக சம்பவ இடம் வந்தார்களா என்றால் இல்லை மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். 2–ம் எதிரி ஊர் தலைவர் என்றால் இல்லை அவரது தாயார் தான் ஊர் தலைவர். எதிரிகள் இருவரும் தி.மு.க கட்சியை சேர்ந்தவர் என்றாலும், நாங்கள் அதிமுக கட்சியை சேர்ந்தவர்கள் என்றாலும் சரிதான். சம்பவ சமயத்தில் அதிமுக ஆட்சி நடைபெற்றது என்றால் சரிதான். எனது சகோதரர் முருகேசன் ஊராட்சி மன்ற உறுப்பினர் என்றால் இல்லை அவர் தேர்தலில் தோற்றுவிட்டார். எனது சகோதரர் தேர்தலில் திமுக கட்சியை சேர்ந்தவரை எதிர்த்து போட்டியிட்டார் என்றால் சரிதான். எனக்கும், எதிரிக்கும் அதன் காரணமாக அரசியல் முன்பகை உண்டு என்றால் சரியல்ல. 1–ம் எதிரியின் மனைவிக்கும், எனது தாயாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்தில் எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவத்தில் எனது சட்டையில் ரத்த கரை படிந்தது என்றால் சரிதான். அந்த ரத்தம் படிந்த சட்டைகளை போலிசார் வாங்கிகொண்டார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் என்னை திட்டவும் இல்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும், நான் இவ்வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும், எனது சகோதரருக்கும் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி இவ்வழக்கை பொய்யாக எதிரிகள் மீது அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 57/2024 |
| Deposition of witness | : | P.W – 2 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's /Husband Name | : | அம்மாசி |
| Village | : | குவளைக்கால் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 55 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Both Accused Present.

<u>**முதல் விசாரணை**</u>:–

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது குடும்பத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் குழு பிரச்சனை இருந்தது. அது சம்பந்தமாக எனது தாயார் ஆத்தாளு அம்மாவை மகேஸ்வரியும் அவரது கணவர் குமாரசாமியும் அடித்துவிட்டார்கள். அது சம்பந்தமாக நன்னிலம் காவல் நிலையத்தில் 19.02.2020 ல் புகார் கொடுத்தோம். 21.02.2020–ம் தேதி மாலை 03.30 மணியளவில் நானும், எனது தம்பி குருமூர்த்தி மற்றும் அம்மா ஆத்தாளு ஆகியோருடன் வீட்டில் இருந்தோம். அப்போது அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி எனது தாயாரை தரக்குறைவாக பேசினார்கள். அதை தடுத்து கேட்ட எனது தம்பி குருமூர்த்தியை ரமேஷ் அருவாளால் குருமூர்த்தியின் இடது பக்க தலையில் வெட்டினார் அதில் குருமூர்த்திக்கு மண்டை உடைந்தது. தடுத்த என்னை எதிரி குமாரசாமி கம்பியால் இடது பக்க தலையில் அடித்தார். அதில் எனக்கு மண்டை உடைந்து ரத்த காயம் ஏற்பட்டது. எதிரிகள் இருவரும் என்னையும், எனது தம்பி குருமூர்த்தியையும் குச்சிகாரி மவனே, தேவுடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். எதிரிகள் எங்களை திட்டியதால் எனக்கு மன உளைச்சல் ஆனது. எதிரிகள் இருவரும் அருவாளை காட்டி எங்களை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு போனார்கள். அவ்வாறு மிரட்டியதால் எங்களுக்கு பயமாக உள்ளது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து

சென்றார்கள். நான் ஐந்து நாட்கள் வரை சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரிகள் நன்னிலம் செல்லவேண்டுமென்றால் எங்கள் வீட்டை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் எனது தாயாரும் உடன் இருந்தார் என்றாலும், எதிரிகள் எனது தாயாரை திட்டினார்கள் என்றாலும் சரிதான். போலிசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினமே போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு போலிசார் எனது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை சுமார் எத்தனைபேர் பார்த்தார்கள் என்றால் ஐந்து நபர்கள் பார்த்திருப்பார்கள். போலிசார் எனது ரத்தம் படிந்த துணிகளை பார்த்தார்கள் என்றால் சரிதான். ஆனால், ரத்தம் படிந்த துணிகளை வாங்கிகொள்ளவில்லை என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. எதிரிகளுடன் எங்களுக்கு அரசியல் முன்பகை உண்டு என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் என்னையும் எனது சகோதரரையும் திட்டவும் இல்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும், நான் இவ்வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும், எனது சகோதரருக்கும் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி இவ்வழக்கை பொய்யாக எதிரிகள் மீது அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.